**அரையாண்டுப் பொதுத்தேர்வு - 2018**

**பத்தாம் வகுப்பு அறிவியல் விடைக்குறிப்பு.**

| வினா எண் | விடை | மதிப்பெண்கள் |
|---|---|---|
| 1 | ஆப்பிரிக்கா | 1 |
| 2 | வைரஸ் | 1 |
| 3 | தைராய்டு சுரப்பி | 1 |
| 4 | பால் இனப்பெருக்கம் | 1 |
| 5 | வெட்டும் பற்கள் | 1 |
| 6 | நீரைக் கடத்துதல் | 1 |
| 7 | Compact Fluorescent Light | 1 |
| 8 | ஹீலியம் - ஆக்ஸிஜன் | 1 |
| 9 | லாக்டிக் அமிலம் | 1 |
| 10 | துருப்பிடிக்காத எ.்.கு | 1 |
| 11 | $CH_2$ | 1 |
| 12 | நேர்பிழை (- கழிக்க வேண்டும்) | 1 |
| 13 | விசை | 1 |
| 14 | நிலக்கரி | 1 |
| 15 | படிக லென்சு | 1 |
| **பிரிவு - II எவையேனும் 20 வினாக்களுக்கு விடையளிக்கவும். 20X2= 40** | | |
| 16 | ➢ தடுப்பு மருந்து - நுண்ணுயிர்கள்<br>➢ இயற்கை வாயு - எரிபொருள்<br>➢ சிட்ரிக் அமிலம் - கரிம அமிலங்கள்<br>➢ மானோகுளோனல் எதிர்ப்பு பொருள்- மருந்து<br>➢ வைட்டமின்கள் - வளர்சிதை மாற்றம் | 4X1/2 = 2 |
| 17 | ➢ புறத்தோற்றத்தில் வெளிப்படையாகக் காணப்படும் பண்புகள் **பீனோடைப்** எனப்படும். எ.கா: தண்டின் உயரம், மலரின் நிறம்<br>➢ பண்புகளுக்குக் காரணமான குரோமோசோம் அல்லது ஜீன் அமைப்புத் தன்மைக்கு **ஜீனோடைப்** எனப் பெயர்.<br>எ.கா: TT, Tt, tt | 1<br>1 |
| 18 | ➢ அமைலேஸ்<br>➢ கணையத்தில் | 1<br>1 |
| 19 | ➢ பொதுவாக மூன்று நோய்களுக்கு எதிராக உடலில் செலுத்தப்படும் மருந்துப்பொருள் முத்தடுப்பூசி எனப்படும்.(DPT)<br>➢ இத்தடுப்பூசியினால் தொண்டை அடைப்பான், கக்குவான் இருமல் மற்றும் டெட்டனஸ் ஆகிய நோய்கள் தடுக்கப்படுகின்றன. | 1<br>1 |
| 20 | (1) டென்டிரைட்டுகள்<br>(2) உட்கரு<br>(3) மையலின் உறை<br>(4) ஆக்சான் | 4X1/2 = 2 |
| 21 | ➢ விதைகள் சிறியனவாகவும்,<br>➢ இலேசானதாகவும்,<br>➢ துகள்களாகவும் இருந்தால் காற்றில் விகைள் பரவும்.<br>➢ விதைகளின் மேற்பரப்பில் வளரிகளும் சவ்வு போன்ற இறகுகள் இருக்க வேண்டும். | 4X1/2 = 2 |
| 22 | ➢ திமிங்கிலம் - துடுப்பு<br>➢ துருவக்கரடி - தடித்த தோல்<br>➢ கங்காரு - வயிற்றில் பை<br>➢ தாரங்களை உண்ணும் பாலூட்டிகள் - செல்லுலோஸ் | 4X1/2 = 2 |
| 23 | ➢ பாலூட்டிகளின் முதிர்ந்த இரத்த சிவப்பணுக்கள்.<br>➢ இவ்விடம் சுவாச நிறமியான ஹீமோகுளோபினால் நிறப்பப்பட்டுள்ளது. | 1<br>1 |
| 24 | b) இரத்தத்தின் வேதியியைபு சமநிலையைப் பேணுகிறது. | 2 |
| 25 | a) சாதாரண உடல் நிலையில் உள்ள மனிதரில் நாளொன்றுக்கு 180 லிட்டர் இரத்தம் | 1 |

| | | |
|---|---|---|
| | சிறுநீரகத்தால் வடிகட்டப்படுகிறது.<br>b) நாளொன்றுக்கு **1முதல் 1.5 லிட்டர்** அளவு கழிவுப்பொருள்கள் அடங்கிய நீர் சிறுநீராக வெளியேற்றப்படுகிறது. | 1 |
| 26 | a) சுண்ணாம்பு நீர் உள்ள சோதனை குழாயில் காற்றை வாய் வழியாக ஊதும்போது சுண்ணாம்பு நீர் **கார்பன் டை ஆக்ஸைடால்** பால் போல் மாறுகிறது.<br>b) சுவாசித்தலின்போது வாயுப்பரிமாற்றம் **சுவாச நுண் பையில்** நடைபெறுகிறது. | |
| 27 | ➢ தொட்டால் சிணுங்கி செடியின் பருத்த இலையடி (பல்வைனஸ்) பகுதியில் உள்ள பாரன்கைமா செல்களில் நீர் உட்புகுதல் மற்றும் வெளியேறுதல் நடைபெறுகிறது.<br>➢ இந்த இயக்கத்தினால் சிற்றிலைகளில் விரைப்பழுத்தம் ஏற்பட்டு சிற்றிலைகள் சுருங்கி விரிகின்றன. | 2 |
| 28 | ➢ தாவரங்கள் சூழந்நிலை மண்டலத்தின் முதல் நிலை உற்பத்தியாளர்கள்.<br>➢ உற்பத்தியாளர்கள் அகற்றப்பட்டால் அவற்றை உணவாக உட்கொள்ளும் தாவர உண்ணிகளும் மற்ற உயிரனங்களும் உணவில்லாமல் பாதிக்கப்படும்.<br>➢ சூழ்நிலை சமநிலை பாதிக்கப்பட்டு சூழ்நிலையே அழிய நேரிடும். | 2 |
| 29 | a) உரம் தயாரித்தலில் **இயற்கை வாயு** பயன்படுகிறது..<br>b) இயற்கை வாயுவில் பெருமளவு **மீத்தேன் (90%), சிறிதளவு புரொப்பேனும் பியூட்டேனும்** உள்ளது.. | 1<br>1 |
| 30 | ➢ சுற்றுச்சூழலில் உள்ள கழிவுகளை நுண்ணுயிர்களைக் கொண்டு நீக்கும் முறைக்கு கழிவு நீர் சுத்திகரிப்பில் உயிரிய தீர்வு எனப்படும்.<br>➢ நைட்ரசோமோனாஸ் யூரோப்பியே என்னும் பாக்டீரியாவைப் பயன்படுத்தி சுவர்கள் கட்டிடங்களில் உள்ள மாசுக்களை நீக்கலாம். | 1<br>1 |
| 31 | ➢ சூரிய ஆற்றல் மற்றும் அணுக்கரு ஆற்றல்களில் கதிர்வீச்சு அபாயம் உள்ளது.<br>➢ ஆனால் காற்று ஆற்றலில் இந்த கதிர்வீச்சு அபாயம் கிடையாது | 2 |
| 32 | (table below) | 4X1/2 = 2 |

**32.**

| கரைசல் | பிரிகை நிலைமை | பிரிகை ஊடகம். |
|---|---|---|
| பாலாடைக்கட்டி | கொழுப்பு | நீர்மம் |
| சோடா நீர் | வாயு | நீர் |
| புகை | கரித்துகள் | காற்று |
| சர்க்கரைக் கரைசல் | சர்க்கரை | நீர் |

**33.** (4X1/2 = 2)

| உண்மைக் கரைசல் | கூழ்மக் கரைசல் |
|---|---|
| ➢ துகள்களின் அளவு $1A^0$ முதல் $10A^0$ வரை. | ➢ துகள்களில் அளவு $10A^0$ முதல் $2000A^0$ வரை |
| ➢ ஒளி புகும் தன்மை உடையது. | ➢ ஒளி புகாத் தன்மை உடையது. |
| ➢ ஒருபடித்தானது. | ➢ பலபடித்தானது |
| ➢ ஒளியைச் சிதறச் செய்யாது. | ➢ ஒளியைச் சிதறச் செய்யும். |

| | | |
|---|---|---|
| 34 | ➢ மோலார் பருமன் = கிராம் மூலக்கூறு நிறை/ வாயுவின் அடர்த்தி(STP யில்)<br>➢ =32/1.429 = 22.4 லிட்டர் | 1<br>1 |
| 35 | ➢ இரும்பு தாமிரத்தைவிட வினத்திறன் அதிகம் உள்ளதால் தாமிரத்தை, தாமில சல்பேட் கரைசலிலிருந்து நீக்குகிறது.<br>➢ காரைசல் இரும்பு சல்பேட்டாக மாறுவதால் கரைசலின் நிறம் மாறுகிறது. (இளம் பச்சை)<br>➢ $Fe + CuSO_4 \rightarrow FeSO_4 + Cu$ | 1<br>1 |
| 36 | a) வினைபடுபொருளின் புறப்பரப்பு அதிகரிக்கும்போது வினையின் வேகமும் அதிகரிக்கும்.( மெக்னீசிய நாடாவைக் காட்டிலும் தூளாக்கப்பட்ட மெக்னீசியத்திற்கு புறப்பரப்பு அதிகம்.)<br>b) காப்பர் சல்பேட் ஒரு வினையூக்கியாக செயல்பட்டு வினையின் வேகத்தை அதிகரிக்கிறது. | 1<br>1 |
| 37 | ➢ 0.25% முதல் 2% வரை கார்பன் உள்ள **எஃகு இரும்பு** கட்டடங்கள், எந்திரங்கள் மற்றும் தொலைக் காட்சி கோபுரங்கள் அமைக்கப் பயன்படுகிறது.<br>➢ 2% முதல் 4% வரை கார்பன் உள்ள **வார்ப்பிரும்பு** கழிவுநீர் குழாய்கள், அடுப்புகள் மற்றும் தண்டவாளங்கள் செய்யப் பயன்படுகிறது.<br>➢ 0.25% க்கும் குறைவான கார்பன் உள்ள **தேனிரும்பு** கம்பிச்சுருள், மின்காந்தம் மற்றும் நங்கூரம் செய்யப் பயன்படுகிறது. | 2 |

| | | |
|---|---|---|
| 38 | ➢ a) உறுதிப்படுத்துதல் சரி, காரணம் சரி: காரணம் சரியாகப் பொருந்துகிறது. | 2 |
| 39 | ➢ a) கிராபைட்டில் உள்ள பிணைப்புறா எலக்ட்ரான்களால், கிராபைட் மின்சாரத்தைக் கடத்தும் அலோகமாகும். எனவே கிராபைட் மின்சுற்றுகளில் பயன்படுத்தப்படுகிறது.<br>➢ கிராபைட்டின் மிருதுத் தன்மைக்கு அவற்றின் அணுக்களுக்கிடைய ஊள்ள வலிமை குறைந்த வாண்டர்வால்ஸ் விசையாகும். | 1<br>1 |
| 40 | **கொடுக்கப்பட்டவை:**<br>➢ தள்ளுவண்டியின் நிறை (m) = 65 கி.கி<br>➢ முடுக்கம் (a ) = 0.3மீ$^{-2}$ )<br>**கேட்கப்பட்டவை:**<br>➢ செயல்படுத்த வேண்டிய விசையின் அளவு (F)<br>**F = ma**<br>**= 65X0.3 = 19.5N** | 1<br>1 |
| 41 | ➢ இடஞ்சுழித் திருப்புத்திறனை **நேர்க் குறியிலும்**, வலஞ்சுழித் திருப்புத்திறனை **எதிர்க் குறியிலும்** குறிப்பிடுவது மரபு. | 1<br>1 |
| 42 | ➢ மின்னோட்டம் - ஆம்பியர்<br>➢ மின்னழுத்த றேுபாடு - வோல்ட்<br>➢ மின்தடை - ஓம்<br>➢ மின்னூட்டம் - கூலூம். | 4X1/2 = 2 |
| 43 | ➢ படம்<br>➢ பாகங்கள் 1) துத்தநாகம் (எதிர்மின்வாய்) 2) நீர்த்த கந்தக அமிலம் ($H_2SO_4$) 3) கண்ணாடிப் பாத்திரம். 4) தாமிரம் (நேர்மின்வாய்) | 1<br>1 |
| 44 | ➢ படிம எரிபொருள்களை எரிக்கும்போது முழுவதுமாக எரித்தால் வெளிவரும் புகையின் அளவு குறைக்கப்படும்.<br>➢ புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மாசைக் குறைக்கலாம்.<br>➢ கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளை படிம எரிபொருள்கள் எரிக்கப்படும்போது கையாள வேண்டும். | 2 |
| 45 | ➢ ஒளிவிலகலால் ஏற்படும் நிறப்பிரிகையில் உள்ள நிறங்களின் தொகுப்பிற்கு நிறமாலை எனப்பெயர்.<br>➢ VIBGYOR (ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், ஆரஞ்சு, சிவப்பு | 1<br>1 |
| 46 | ➢ ஒளி ஒர ஊடகத்திலிருந்து மற்றோர் ஊடகத்திற்குச் செல்லும்போது விலகலடையும்.<br>➢ ஒளி ஒரே ஊடகத்தினுள் நேர்கோட்டிலேயே செல்லும்.(விலகலடையாமல்) | 1<br>1 |
| 47 | <br>➢<br>➢ குழியாடியின்முன் பொருளிலிருந்து முதன்மைக் குவியத்தின் வழியாக வரும் ஒளிக்கதிர்கள் ஆடியலிருந்து முதன்மை அச்சுக்கு இணையாக எதிரொளித்துச் செல்லும். | 1<br>1 |
| | | |
| 48 | **அ) கை கழுவுதலின் நன்மைகள்:**<br>✓ உணவு உண்பதற்கு முன் கைகளைக் கழுவுவதால் எளிதில் பரவும் நோய்களான சாதாரணச் சளி போன்ற நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.<br>✓ தன் தூய்மையின்மையால் பரவும் நோய்களான காலரா மற்றும் டைபாய்டு போன்ற நோய்களிலிருந்து பாதுகாப்பு பெறலாம்.<br>✓ விரல் இடுக்குகளையும் நகங்களையும் கழுவுவதால் பூஞ்சை நோய்களான படர்தாமரை மற்றும் சேற்றுப் புண் போன்ற நோய்கள் அண்டாது.<br>**ஆ) ஒரு நாளில் கை கழுவிடும் நேரங்கள்:**<br>✓ கழிவறைப் பயன்பாட்டிற்குப் பின்.<br>✓ உணவு உண்ணும் முன் மற்றும் உண்ட பின்பும்.<br>✓ குழந்தையை தூக்குவதற்கு முன்பும் பின்பும்.<br>✓ விளையாட்டிற்குப் பின்.<br>✓ ரூபாய் நோட்டுக்களை கையாண்டபின். | 2<br>3 |

| | | |
|---|---|---|
| | ✓ ஆய்வகங்களில் வேலை செய்த பின்.<br>✓ நொயாளியைச் சந்தித்த பின். | |
| 49 | **மூளை:**<br>➢ மூளையே செய்திகளை ஆய்ந்தறியும் மைய உறுப்பு ஆகும். மேலும், அது மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.<br>➢ முன் மூளை 2. நடு மூளை 3. பின் மூளை<br>**முன் மூளை:**<br>➢ பெருமூளை, தலாமஸ், ஹைப்போ தலாமஸ் ஆகிய அமைப்புகளைக் கொண்டுள்ளது.<br>**பெருமூளை:**<br>➢ மூளையின் பெரும்பகுதியாக, பெரு மூளை அமைந்துள்ளது. (மூளையின் மூன்றில் இரண்டு பகுதியாகப் பெருமூளை உள்ளது.)<br>➢ பெருமூளையின் வெளிப்புறப்பகுதிக்குச் சாம்பல் நிறப்பகுதி அல்லது பெருமூளைப் புறணி என்று பெயர்.<br>➢ உட்புறப்பகுதிக்கு வெண்மை நிறப்பகுதி என்று பெயர்.<br>**பெருமூளையின் பணிகள்:**<br>➢ பெருமூளை, உணர்வு, அறிவுக்கூர்மை, நினைவாற்றல், கற்பனைத்திறன், காரண காரியம் ஆடீநுந்தறிதல் முதலியவற்றின் இருப்பிடமாகத் திகழ்கிறது.<br>**தலாமஸ்:**<br>➢ தலாமஸ் என்ற அமைப்பைச் சுற்றிப் பெரு மூளை சூழ்ந்துள்ளது. உணர்வு மற்றும் இயக்கு உணர்வலைகளைக் கடத்தும் முக்கியப் பணியை இது செய்கிறது.<br>**ஹைபோதலாமஸ்:**<br>➢ இது தலாமஸின் அடிப்புறத்தில் அமைந்துள்ளது. இஃது உடல் வெப்பநிலை, உண்ணுதல், நீர் பருகுதல் போன்றவற்றிற்கான உந்துதல், பாலுறவு நடத்தையை ஒழுங்குபடுத்துதல், கிளர்ச்சி, சினம், பயம், தூண்டுதல் போன்ற மனவெழுச்சி வெளிப்பாடுகளைக் கட்டுப்படுத்தும் செயல்களைச் செய்கிறது.<br>**நடுமூளை:**<br>➢ தலாமஸிற்கும் பின்மூளைக்கும் இடையில் நடுமூளை அமைந்துள்ளது.<br>➢ நடுமூளையின் முதுகுப் பக்கத்தில் நான்கு அரைவட்டக் கோளங்கள் காணப்படுகின்றன.<br>➢ அவை கார்போரா குவாட்ரிஜெமினா ஆகும்.<br>➢ இது பல்வேறு பார்த்தலின் அனிச்சை செயல்களையும், பார்வையின் சார் இயக்கத்தைக் கட்டுப்படுத்துதல், ஒழுங்குபடுத்துதல் போன்ற செயல்களையும் செய்கிறது.<br>➢ நடுமூளை, பின்மூளை இரண்டும் சேர்த்து மூளைத்தண்டு என அழைக்கப்படுகிறது.<br>**பின் மூளை:**<br>➢ பான்ஸ், சிறுமூளை, முகுளம் என மூன்று பகுதிகளையுடையது.<br>**சிறுமூளை:**<br>➢ இது பெருமூளைக்குக் கீழ்ப்புறமாக அமைந்துள்ளது.<br>➢ சிறுமூளையில் மையப் பகுதி இரண்டு பக்கவாட்டுக் கதுப்புகளுடன் காணப்படுகின்றன.<br>➢ சிறுமூளை, நடத்தல் அல்லது ஓடுதல் போன்ற இயக்குதசைகளின் இயக்கங்களை ஒழுங்குபடுத்துகிறது.<br>**பான்ஸ்:**<br>➢ சிறுமூளையின் கதுப்புகளை இணைக்கும் நரம்பு நாரிழைப் பாலம் பான்ஸ் ஆகும்.<br>➢ இது பெருமூளையிலிருந்து சிறுமூளைக்குச் செய்திகளைக் கடத்துகிறது.<br>➢ இதில் அமைந்துள்ள பிற மையங்கள், உறக்கம், சுவாசத்திற்கானவை ஆகும்.<br>**முகுளம்:**<br>➢ தண்டுவடத்தோடு இணையும் மூளையின் கடைசிப் பகுதி முகுளம் ஆகும்.<br>➢ மேலேறும் மற்றும் கீழிறங்கும் நரம்புப் பாதைகளை ஒருங்கிணைக்கும் வழித்தடமாக முகுளம் செயலாற்றுகிறது.<br>➢ இதயத்துடிப்பு, இரத்தக்குழல்கள் சுருக்கம், மூச்சுவிடுதல் போன்ற செயல்களை ஒழுங்குபடுத்தும் பல்வேறு அனிச்சை செயல்களின் மையமாக முகுளம் செயல்படுகிறது.<br>➢ முகுளத்தின் வெண்ட்ரிக்கிள் பெரு மூளை அரைக்கோள வெண்ட்ரிக்கிள்களுடன் இணைந்துள்ளது | 5 |

| | | |
|---|---|---|
| 50 | **பாலிலா இனப்பெருக்கம்:**<br>உயரினங்கள் பாலுறுப்புக்கள் இல்லாமல் ஏற்கனவே உள்ள உடல் உறுப்புகள் மூலம் இனப்பெருக்கம் நடைபெறுவது பாலிலா இனப்பெருக்கம் எனப்படும்.<br>**வகைகள்:**<br>**அரும்புதல்:**<br>உயிரியின் உடலில் புறவளரிகள் தோன்றிஅ வை புதிய உயரினத்தைத் தோற்றுவிக்கும்.<br>தாவரங்களில் பிரையோபில்லம், விலங்குகளில் ஹைட்ராவிலும் இந்த வகை இனப்பெருக்கம் உள்ளது.<br>**துண்டாதல்:**<br>உயிரியின் உடல் துண்டுகளாக மாறி ஒவ்வொரு துண்டும் புதிய உயரினத்தைத் தோற்றுவிப்பது.<br>தாவவங்களில் ஸ்பைரோகைரா பாசியிலும், விலங்குகளில் பிளனேரியா புழுவிலும் இவ்வகை இனப்பெருக்கம் காணப்படுகிறது.<br>**ஸ்போர்கள்:**<br>பூஞ்சைகள் தங்கள் உடலில் பாலிலா இனப்பெருக்க ஸ்போர்களை உருவாக்குகின்றன. இவை கீழே விழுந்து புதிய உயரினத்தை உண்டாக்கும்.<br>கொனிடியோஸ்போர் என்பது பெனிசிலியம் பூஞ்சையின் ஸ்போர்களாகும்.<br>**ஒருசெல் உயிரினங்களில்:**<br>பாக்டீரியா இருசம பிளவு மூலம் இனப்பெருக்கம் செய்கிறது., | 5 |
| 51 | **சூழ்நிலை மண்டலத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கான காரணங்கள்:**<br>➢ சூழ்நிலை மண்டலத்தில் ஏதாவது ஒரு உயிரி பாதிக்கப்பட்டாலும் சூழ்நிலை மண்டலத்தின் சமநிலை பாதிக்கப்படும்.<br>➢ தாவரங்கள் முழுவதும் நீக்கப்பட்டால் மற்ற உயிரினங்களுக்கு உணவே கிடைக்காது.<br>➢ இதனால் நில மற்றும் நீர் சூழ்நிலை மண்டலங்கள் பாதிக்கப்படும்.<br>➢ விலங்குகளைக் கொல்வதாலும் நிலம், நீர் மாசடைவதாலும் இயற்கைச் சமநிலை பாதிக்கப்படுகிறது.<br>**உணவுச்சங்கிலி:**<br>➢ புல் → வெட்டுக்கிளி → தவளை → பாம்பு → கழுகு.<br>➢ பாசிகள் → சிறிய விலங்குகள் → மீன் → மீன்கொத்தி | 3<br>2 |
| 52 | **ஐசோடோப்பு:**<br>ஒத்த அணு எண்ணையும் வேறுபட்ட நிறை எண்ணையும் கொண்ட ஒரே தனிமத்தின் பல்வேறு அணுக்கள் ஐசோடோப்புக்கள் எனப்படும்.<br>எ.கா: $_{17}Cl^{35}$, $_{17}Cl^{37}$<br>**அவோகேட்ரா விதியின் பயன்கள்:**<br>➢ ஒரே வெப்பநிலைஒரே அழுத்தத்தில் சம பருமனுள்ள வாயுக்கள் கம எண்ணிக்கையுள்ள மூலக்கூறுகளைப் பெற்றிருக்கும். இது அவோகேட்ரோ விதியாகும்.<br>➢ வாயுக்களின் அணுக்கட்டு எண்ணைக் கணக்கிடப் பயன்படுகிறது.<br>➢ வாயுச் சேர்மங்களின் அணுக்கட்டு எண்ணைக் கணக்கிடவும் உதவுகிறது.<br>➢ மூலக்கூறு நிறைக்கும் ஆவி அடர்த்திக்கும் உள்ள தொடர்பைத் தருகிறது.<br>➢ மூலக்கூறு நிறை = 2x ஆவி அடர்த்தி.<br>➢ STP யில் வாயுவின் மோலார் பருமனைக் கணக்கிட உதவுகிறது.<br>➢ STP யில் வாயுவின் மோலார் பருமனின் மதிப்பு = 2.24 லி.<br>➢ கேலுசாக்கின் விதியைத் தெளிவாக விளக்குகிறது. | 2<br>3 |
| 53 | படிவரிசையின் சிறப்பியல்புகள்:<br>➢ **படிவரிசையில் உள்ள அடுத்தடுத்த சேர்மங்கள் $CH_2$ என்ற பொது வேறுபாட்டிலும் மூலக்கூறு நிறை 14 யஅர(அணு நிறை அலகு) என்ற அலகாலும் வேறுபடுகின்றன.**<br>➢ **ஒரு படிவரிசையில் உள்ள அனைத்துச் சேர்மங்களும் ஒரேவகைத் தனிமங்களையும், வினைத் தொகுதிகளையும் பெற்றிருக்கும்.**<br>➢ **ஒரு படிவரிசையில் உள்ள அனைத்துச் சேர்மங்களையும், ஒரே பொதுவாய்பாட்டினால் குறிப்பிட இயலும்.**<br>➢ **எ.கா. அல்கேன் = $C_nH_{2n+2}$ அல்கீன் = $C_nH_{2n}$ அல்கைன் = $C_nH2_{n-2}$**<br>➢ **லக்கூறுநிறையின் அதிகரிப்பைப் பொறுத்து சேர்மங்களின் இயற்பண்புகள் ஓர் ஒழுங்கான முறையில் மாறுகின்றன.**<br>➢ **எல்லாச் சேர்மங்களும், ஒத்த வேதிவினைகளில் ஈடுபடுகின்றன.**<br>➢ **எல்லாச் சேர்மங்களையும், பொதுவான முறையில் தயாரிக்கலாம்.** | 5 |

| | | |
|---|---|---|
| 54 | சந்திராயனின் சாதனைகள்:<br>➢ நிலவின் மண்ணில் நீர் மூலக்கூறுகள் அதிகப் பரப்பில் பரவியிருப்பதைக் கண்டறிந்தது.<br>➢ சந்திராயனின் கனிம வரை கருவி(Moon minerology Mapper), நிலவு முற்காலத்தில் முற்றிலும் உருகிய நிலையிலிருந்ததை உறுதி செய்கிறது.<br>➢ ஐரோப்பிய விண்வெளி மையத்தின்பயன்சுமை – சந்திராயன் 1 படமாக்கும் X–கதிர் (CIXS – Chandrayan 1 Imaging X-Ray Spectrometer) நிறமாலைமானி, 24க்கும் மேற்பட்ட வலிமை குன்றிய சூரிய ஒளிப்புயல்களைப் பதிவு செடீநுதது.<br>➢ சந்திராயன் I–இல் பொருத்தப்பட்ட நில வரைபட ஒளிப்படக்கருவி, அமெரிக்காவின் அப்போலோ 15, அப்போலோ 11 நிலவுக்கலன்கள் நிலவில் தரையிறங்கிய இடங்களைப் பதிவு செய்துள்ளது.<br>➢ நிலவின் கனிம வளம் பற்றிய தகவல்கள் உயர் பகுதிறன் நிறமாலைமானி மூலம் பெறப்பட்டன.<br>➢ நிலவின் லேசர் தொலைவறியும் கருவி (LLRI Lunar Laser Ranging Instrument) நிலவின் துருவங்கள் மற்றும் முக்கியப் பகுதிகள் பற்றிய தகவல்களை அளித்தது.<br>➢ CIXS X–கதிர் படக்கருவி, நிலவில் அலுமினியம், மெக்னீசியம், சிலிக்கான் இவற்றின் தடயங்களைப் பதிவு செய்துள்ளது.<br>➢ பல்கேரியன் பயன்சுமையான கதிர்வீச்சுக் கண்காணிப்புக் கருவி (Radiation Dose Monitor – RADOM) சந்திராயன் ஏவப்பட்ட நாளிலேயே செயல்படுத்தப்பட்டு இறுதிநாள் வரை செயல்பட்டது.<br>➢ 75 நாள்களில் சந்திராயன் புகைப்படக் கருவி 40,000க்கும் மேற்பட்ட படங்களைப் புவிக்கு அனுப்பியது.<br>➢ நிலவின் மேடுபள்ளங்களை நில வரைபட ஒளிப்படக்கருவி பதிவு செய்துள்ளது.<br>➢ புவியின் முழு வடிவத்தையும் முதன்முறையாகப் பதிவு செய்து அனுப்பியது.<br>➢ சந்திராயன் I நிலவுப் பரப்பில் மனிதர்களின் உறைவிடமாகப் பயன்படும் பல குகைகளைக் கண்டறிந்தது | 5 |
| 55 | **கொடுக்கப்பட்டவை:**<br>➢ குழியாடியின் வளைவு ஆரம் (R) = 30 செ.மீ (R = 2f, ∴ f = R/2 = 15)<br>➢ பொருளின் தொலைவு (u) = 10 செ.மீ<br>பொருளின் உயரம் (h) = 5 செ.மீ<br>**கேட்கப்பட்டவை:**<br>➢ பிம்பத்தின் நிலை (தொலைவு) (v) = ?<br>**தீர்வு:**<br>➢ 1/f = 1/v+1/u<br>➢ 1/-15 = 1/v +1/-10<br>➢ 1/v = 1/-15-1/-10 = -2+1/30<br>➢ 1/v = 1/30<br>➢ v = 30/1 = 30 செ.மீ<br>**பிம்பத்தின் நிலை: ஆடியின் வளைவு மையத்தில்(C) அதே அளவுள்ள தலைகீழான மெய்ப்பிம்பம் கிடைக்கும்.**<br>ஆ) கதிர் வரைபடம்.<br><br> | 3<br>2 |

S.Arockiam.
B.T.Asst
S.I.(BMS)H.S.S., Valoothoor
9443798666